மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருச்செந்தூர்
முன்னிலை திருமதி.S. முத்துலெட்சுமி, B.A., M.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருச்செந்தூர்.
2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் வியாழக்கிழமை
அசல் வழக்கு எண். 123/2023

-----

S.A.செய்யது ஜமால் அப்துல் நாசர் ... வாதி

/ எதிர் /

செய்யதலி பாத்திமா ... பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 28-03-2024 தேதியாகிய இன்று விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. H.M.F. முஹம்மது தௌபீக், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று கொண்ட நிலையில் பிரதிவாதி அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜரின்மையால் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது வாதிக்கும், பிரதிவாதிக்கும் 26.04.2009 ம் தேதியில் நடைபெற்ற திருமணம் ரத்தாகிவிட்டது என விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கும்படிக்கும், செலவுத் தொகை கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வாதி வழக்குரையின் சுருக்கம் :-</u>**

(i)வாதியும், பிரதிவாதியும் இஸ்லாமிய மதத்தை சார்ந்தவர்கள். வாதியும், பிரதிவாதியும் கணவர் மனைவி ஆவார்கள். வாதி, பிரதிவாதி ஆகியோரது

திருமணம் இருவீட்டார் சம்மதத்துடன் பெரியோர்கள் முன்னிலையிலும் வாதி, பிரதிவாதியின் ஜமாத்தார்கள் முன்னிலையிலும் உடன்குடி R.S.U. திருமண மண்டபத்தில் வைத்து இஸ்லாமிய முறைப்படி 26.04.2009-ம் தேதியில் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணம் உடன்குடி நயினாபிள்ளைத்தெரு முகைதீன் ஆண்டவர் ஜீம்மா பள்ளி நிக்காஹ் பதிவேட்டில் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட திருமணபதிவேட்டின் ஒளிநகல் வாதிக்கும், பிரதிவாதிக்கும் வழங்கப்பட்டது. வாதிக்கும், பிரதிவாதிக்கும் திருமணம் ஆகி 14 வருடங்களுக்கு மேலாகிறது. வாதிக்கும், பிரதிவாதிக்கும் 13 வயதுடைய A.J.N. அபு முபிகா நபிசா என்ற பெண்குழந்தை உள்ளது, மேற்கண்ட பெண்குழந்தை பிரதிவாதியுடன் வசித்து வருகிறார்.

(ii).கடந்த சில ஆண்டுகளாக வாதிக்கும், பிரதிவாதிக்கும் கருத்துவேறுபாடு காரணமாக அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு கடந்த 1 வருடமாக வாதியும், பிரதிவாதியும் ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தையில்லாமல் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். வாதியுடைய ஜமாத்தாரர்களும், பிரதிவாதியுடைய ஜமாத்தார்களும், வாதியுடைய குடும்ப பெரியவர்களும், பிரதிவாதியின் குடும்ப பெரியவர்களும் , வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தி சுமுகமாக கணவன் மனைவியாக வாழ எடுத்த முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை. கடந்த 2022 செப்டம்பர் முதல் வாதியும் பிரதிவாதியும் கணவன் மனைவி என்ற குடும்ப தாம்பத்திய உறவுமின்றி இருவரும் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள். வாதியும் பிரதிவாதியும் சேர்ந்து வாழ எடுத்த எந்த முயற்சியும், பலனளிக்காத காரணத்தினால் வாதியானவர், குலசேகரன்பட்டிணத்தை சார்ந்த காஜாமைதீன் மகன் ஹஷன் சைபுதீன் மற்றும் வாதியின் சகோதரரான அபுபக்கர் குமாரர் செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை

சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில் வைத்து பிரதிவாதியுடன், வாதிக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்து கொள்ள முடிவு செய்து கடந்த 10.06.2023 அன்று மணமுறிவு செய்ய வாதி இஸ்லாமிய சட்டப்படி பிரதிவாதியிடம் நேரில் முதல் தலாக்கை கூறினார். வாதி மீண்டும் 11.07.2023 அன்று வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் சமரசம் பேசி சேர்ந்து வாழ எந்தவிதமான வாய்ப்பும் ஏற்படாத காரணத்தினால் மேற்கண்ட தேதியில் மேற்கண்ட காஜாமைதீன் மகன் ஹஷன் சைபுதீன் மற்றும் வாதியின் சகோதரரான அபுபக்கர் குமாரர் செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில் வைத்து பிரதிவாதியுடன், வாதிக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்துக்கொள்ளும் விதமாக இரண்டாவது தலாக்கை கூறினார். அதன்பின்னரும் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் சமரசம் பேசி சேர்ந்து வாழ எந்தவிதமான வாய்ப்பும் ஏற்படாத காரணத்தினால் 12.08.2023 அன்று காஜாமைதீன் மகன் ஹஷன் செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில் வைத்து பிரதிவாதியுடன், வாதிக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்துக்கொள்ளும் விதமாக மூன்றாவது தலாக்கை கூறினார்.

(iii).வாதி, பிரதிவாதியை வெவ்வேறு காலகட்டங்களில் மூன்று முறை மேற்கண்ட சாட்சிகளுக்கு முன்பு வைத்து நேரில் தலாக் செய்த விவரத்தை எழுத்துப்பூர்வமாக கடந்த 14.08.2023 அன்று பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் ஜாமாத் தலைவருக்கும் பதிவுத்தபாலில் கடிதம் அனுப்பியுள்ளார். அதனை 16.08.2023 அன்று பிரதிவாதியும், பிரதிவாதியின் ஜமாத் தலைவரும்பெற்றுக் கொண்டார்கள். பிரதிவாதி கடந்த 17.08.2023 அன்று வாதிக்கும், உடன்குடி நயினாபிள்ளைத்தெரு முகைதீன் ஆண்வர் ஜீம்மா பள்ளி ஜமாத் தலைவர் அவர்களுக்கும் பதில் கடிதம் அனுப்பியுள்ளார். அதில் வாதி அனுப்பிய

14.08.2023 தேதியிட்ட கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை ஒப்புக்கொண்டுவாதியின் கோரிக்கையான மணமுறிவு (தலாக்) ஐ ஏற்றுக்கொண்டு பதில் அனுப்பியுள்ளார்.

(iv).வாதி 14.08.2023 அன்று பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் ஜமாத் தலைவருக்கும் பிரதிவாதி 17.08.2023 அன்று வாதிக்கும் ஜமாத் தலைவருக்கும் மணவிலக்கு (தலாக்) சம்பந்தமான கடிதங்களை ஜமாத்தார்கள் பரிசீலனை செய்து வாதியால் அனுப்பப்பட்ட மணமுறிவு (தலாக்) கடிதத்தை பிரதிவாதி ஏற்றுக்கொண்டதினால் மேற்கண்ட ஜமாத் சார்பாகா 20.08.2023 அன்று மேற்கண்ட ஜமாத்தார்கள் முன்னிலையில் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் ஏற்பட்ட 26.04.2009 தேதியில் நடைபெற்ற திருமண ஒப்பந்தம் மார்க்க அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதாக சான்று அளித்துள்ளார்கள். எனவே வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.பிரதிவாதி தோன்றா தரப்பினராக்கப்பட்ட நிலையில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.2 ஆக திரு.அப்துல் நசீர் என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.5 குறியீடு செய்யப்பட்டது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**4.இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை:-**

1. வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
2. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

**5. பிரச்சனை 1 க்கான தீர்வு :-**

**1. வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**

இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் 14.08.2023 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கும், பிரதிவாதி

ஜமாத்துக்கும் கொடுத்த மணமுறிவு கடிதம் வா.சா.ஆ.1 ஆகவும், 18.08.2023 தேதியிட்ட பிரதிவாதியும், பிரதிவாதியின் ஜமாத்தாரும் வாதியின் மணமுறிவு கடிதத்தை பெற்றுக் கொண்டதற்கான பதிவு தபால் ஒப்புகை அட்டைகள் அசல் எண்ணம் 2 வா.சா.ஆ.2 ஆகவும், 17.08.2023 தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய கடிதம் அஞ்சல் உறையுடன் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 20.08.2023 தேதியிட்ட உடன்குடி நைனா பிள்ளை தெரு முகைதீன் ஆண்டவர் ஜீமா பள்ளி வழங்கிய திருமண ஒப்பந்த ரத்து சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 26.04.2009 தேதியிட்ட வழக்கின் வாதி, பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றதை முகைதீன் பள்ளிவாசல் நிக்கா பதிவேட்டில் பதிவு செய்ததன் ஒளிநகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.வாதியின் வழக்குரையில், வாதி, பிரதிவாதி ஆகியோரது திருமணம் இருவீட்டார் சம்மதத்துடன் பெரியோர்கள் முன்னிலையிலும் வாதி, பிரதிவாதியின் ஜமாத்தார்கள் முன்னிலையிலும் உடன்குடி R.S.U. திருமண மண்டபத்தில் வைத்து இஸ்லாமிய முறைப்டி 26.04.2009–ம் தேதியில் திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி திருமணம் உடன்குடி நயினாபிள்ளைத்தெரு முகைதீன் ஆண்டவர் ஜீம்மா பள்ளி நிக்காஹ் பதிவேட்டில் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஐ பார்வையிடும் போது வாதிக்கும், பிரதிவாதிக்கும் 26.04.2009 அன்று நடைபெற்ற திருமணம் முஹிய்யத்தீன் பள்ளிவாசல் நிக்காஹ் என்னும் திருமண பதிவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது தெரியவருகிறது.

7.மேலும் வா.சா.1 தன்னுடைய முதல்விசாரணையில், தங்களது திருமணம் இருவீட்டார் சம்மதத்துடன் பெரியோர்கள் முன்னிலையிலும், ஜமாத்தார்கள் முன்னிலையிலும் உடன்குடி R.S.U. திருமண மண்டபத்தில் வைத்து இஸ்லாமிய

முறைப்படி 26.04.2009–ம் தேதியில் திருமணம் நடைபெற்றது என்றும் மேற்படி திருமணம் உடன்குடி நயினாபிள்ளைத்தெரு முகைதீன் ஆண்டவர் ஜீம்மா பள்ளி நிக்காஹ் பதிவேட்டில் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

8.மேலும் வா.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில், வாதி, பிரதிவாதி ஆகியோரது திருமணம் இருவீட்டார் சம்மதத்துடன் பெரியோர்கள் முன்னிலையிலும் வாதி, பிரதிவாதியின் ஜமாத்தார்கள் முன்னிலையிலும் உடன்குடி R.S.U. திருமண மண்டபத்தில் வைத்து இஸ்லாமிய முறைப்படி 26.04.2009–ம் தேதியில் திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி திருமணம் உடன்குடி நயினாபிள்ளைத்தெரு முகைதீன் ஆண்டவர் ஜீம்மா பள்ளி நிக்காஹ் பதிவேட்டில் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

9.மேற்படி வாதி தரப்பு சாட்சியங்களிலிருந்தும், வா.சா.ஆ.5 லிருந்தும் வாதிக்கும், பிரதிவாதிக்கும் 26.04.2009 ம் தேதியில் நடைபெற்ற திருமணம் உடன்குடி நயினாபிள்ளைத்தெரு முகைதீன் ஆண்டவர் ஜீம்மா பள்ளி நிக்காஹ் பதிவேட்டில் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

10.வாதியின் வழக்குரையில், கடந்த சில ஆண்டுகளாக வாதிக்கும், பிரதிவாதிக்கும் கருத்துவேறுபாடு காரணமாக அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு கடந்த 1 வருடமாக வாதியும், பிரதிவாதியும் ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தையில்லாமல் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றும், வாதியுடைய ஜமாத்தாரர்களும், பிரதிவாதியுடைய ஜமாத்தார்களும், வாதியுடைய குடும்ப பெரியவர்களும், பிரதிவாதியின் குடும்ப பெரியவர்களும், வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தி சுமுகமாக கணவன் மனைவியாக வாழ எடுத்த முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை என்றும், கடந்த 2022 செப்டம்பர் முதல் வாதியும் பிரதிவாதியும் கணவன் மனைவி என்ற குடும்ப

தாம்பத்திய உறவுமின்றி இருவரும் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும், வாதியும் பிரதிவாதியும் சேர்ந்து வாழ எடுத்த எந்த முயற்சியும், பலனளிக்காத காரணத்தினால் வாதியானவர், குலசேகரன்பட்டிணத்தை சார்ந்த காஜாமைதீன் மகன் ஹஷன் சைபுதீன் மற்றும் வாதியின் சகோதரரான் அபுபக்கர் குமாரர் செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில் வைத்து பிரதிவாதியுடன், வாதிக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்து கொள்ள முடிவு செய்து கடந்த 10.06.2023 அன்று மணமுறிவு செய்ய வாதி இஸ்லாமிய சட்டப்படி பிரதிவாதியிடம் நேரில் முதல் தலாக்கை கூறினார் என்றும், வாதி மீண்டும் 11.07.2023 அன்று வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் சமரசம் பேசி சேர்ந்து வாழ எந்தவிதமான வாய்ப்பும் ஏற்படாத காரணத்தினால் மேற்கண்ட தேதியில் மேற்கண்ட காஜாமைதீன் மகன் ஹஷன் சைபுதீன் மற்றும் வாதியின் சகோதரரான அபுபக்கர் குமாரர் செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில் வைத்து பிரதிவாதியுடன், வாதிக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்துக்கொள்ளும் விதமாக இரண்டாவது தலாக்கை கூறினார் என்றும், அதன்பின்னரும் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் சமரசம் பேசி சேர்ந்து வாழ எந்தவிதமான வாய்ப்பும் ஏற்படாத காரணத்தினால் 12.08.2023 அன்று காஜாமைதீன் மகன் ஹஷன், செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில் வைத்து பிரதிவாதியுடன், வாதிக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்துக்கொள்ளும் விதமாக மூன்றாவது தலாக்கை கூறினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

11.வா.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், கடந்த சில ஆண்டுகளாக தனக்கும், பிரதிவாதிக்கும் கருத்துவேறுபாடு காரணமாக அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு கடந்த 1 வருடமாக தானும், பிரதிவாதியும் ஒருவருக்கொருவர்

பேச்சுவார்த்தையில்லாமல் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றும், தன்னுடைய ஜமாத்தாரர்களும், பிரதிவாதியுடைய ஜமாத்தார்களும், பிரதிவாதி குடும்ப பெரியவர்கள், தனக்கும் பிரதிவாதிக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தி சுமுகமாக கணவன் மனைவியாக வாழ எடுத்த முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை என்றும், கடந்த 2022 செப்டம்பர் முதல் தானும் பிரதிவாதியும் கணவன் மனைவி என்ற குடும்ப தாம்பத்திய உறவுமின்றி இருவரும் தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றும், தானும் பிரதிவாதியும் சேர்ந்து வாழ எடுத்த எந்த முயற்சியும், பலனளிக்காத காரணத்தினால் தான், குலசேகரன்பட்டிணத்தை சார்ந்த காஜாமைதீன் மகன் ஹஷன் சைபுதீன் மற்றும் வாதியின் சகோதரரான் அபுபக்கர் குமாரர் செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில் வைத்து பிரதிவாதியுடன், தனக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்து கொள்ள முடிவு செய்து கடந்த 10.06.2023 அன்று மணமுறிவு செய்ய வாதி இஸ்லாமிய சட்டப்படி பிரதிவாதியிடம் நேரில் முதல் தலாக்கை கூறினேன் என்றும், தான் மீண்டும் 11.07.2023 அன்று தனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் சமரசம் பேசி சேர்ந்து வாழ எந்தவிதமான வாய்ப்பும் ஏற்படாத காரணத்தினால் மேற்கண்ட தேதியில் மேற்கண்ட காஜாமைதீன் மகன் ஹஷன் சைபுதீன் மற்றும் தனது சகோதரரான அபுபக்கர் குமாரர் செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில் வைத்து பிரதிவாதியுடன், தனக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்துக்கொள்ளும் விதமாக இரண்டாவது தலாக்கை கூறினேன் என்றும், அதன்பின்னரும் தனக்கும், பிரதிவாதிக்கும் இடையில் சமரசம் பேசி சேர்ந்து வாழ எந்தவிதமான வாய்ப்பும் ஏற்படாத காரணத்தினால் 12.08.2023 அன்று காஜாமைதீன் மகன் ஹஷன், செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாகவும் மேற்கண்டவர்கள் முன்னிலையில்

வைத்து பிரதிவாதியுடன், தனக்கு ஏற்பட்ட திருமண உறவை முடித்துக்கொள்ளும் விதமாக மூன்றாவது தலாக்கை கூறினேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

12.வா.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில், கடந்த சில ஆண்டுகளாக வாதியும், பிரதிவாதியும் கருத்துவேறுபாடு காரணமாக அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு கடந்த 1 வருடமாக வாதியும், பிரதிவாதியும் ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தையில்லாமல் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றும், பிரதிவாதியுடைய ஜமாத்தாரர்களும், தங்கள் ஜமாத்தார்களும், தானும், பிரதிவாதியின் குடும்ப பெரியவர்கள் மற்றும் வாதியின் குடும்ப பெரியவர்களும், வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தி சுமுகமாக கணவன் மனைவியாக வாழ எடுத்த முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை என்றும், கடந்த 2022 செப்டம்பர் முதல் வாதியும் பிரதிவாதியும் கணவன் மனைவி என்ற குடும்ப தாம்பத்திய உறவுமின்றி இருவரும் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும், வாதியும் பிரதிவாதியும் சேர்ந்து வாழ எடுத்த எந்த முயற்சியும், பலனளிக்காத காரணத்தினால் வாதி ஹஷன் சைபுதீன், செய்யது ஷேக் மீரான் ஆகியோர்களை சாட்சியாக வைத்து 10.06.2023 அன்றும், 11.07.2023 அன்றும், 12.08.2023 அன்றும் திருமண உறவை முடித்துக்கொள்ளும் விதமாக மூன்று வெவ்வேறு தேதிகளில் வாதி, பிரதிவாதியை தலாக் கூறினார்(விவகாரத்து) செய்தார் என்ற விபரம் ஜமாத் செயலாளர் என்ற முறையில் தனக்கு தெரியும் என்றும் கூறியுள்ளார்.

13.மேற்படி வாதி தரப்பு சாட்சியங்களிலிருந்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதும், வாதி, பிரதிவாதியின் குடும்ப பெரியவர்கள் மற்றும் இரு ஜமாத்தார்களும் பேசியும் சமாதானம் ஏற்படவில்லை என்பதும், வாதி, பிரதிவாதியிடம் 10.06.2023,

11.07.2023, 12.08.2023 ஆகிய வெவ்வேறு தேதிகளில் மூன்று முறை தலாக் கூறி வாதி, பிரதிவாதியை விவாகரத்து செய்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

14.வாதியின் வழக்குரையில், வாதி, பிரதிவாதியை வெவ்வேறு காலகட்டங்களில் மூன்று முறை மேற்கண்ட சாட்சிகளுக்கு முன்பு வைத்து நேரில் தலாக் செய்த விவரத்தை எழுத்துப்பூர்வமாக கடந்த 14.08.2023 அன்று பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் ஜாமாத் தலைவருக்கும் பதிவுத்தபாலில் கடிதம் அனுப்பியுள்ளார் என்றும், அதனை 16.08.2023 அன்று பிரதிவாதியும், பிரதிவாதியின் ஜமாத் தலைவரும்பெற்றுக் கொண்டார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஐ பார்வையிடும் போது தலாக் விபரத்தை வாதி எழுத்துப் பூர்வமாக 14.08.2023 அன்று பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் ஜமாத் தலைவருக்கும் பதிவுத்தபாலில் அனுப்பிய கடிதம் என்பதும், வா.சா.ஆ.2 ஐ பார்வையிடும் போது பிரதிவாதியும், பிரதிவாதியின் ஜமாத்தலைவரும் பதிவு தபாலை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை என்பதும் தெரியவருகிறது.

15.வா.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில், தனக்கும், பிரதிவாதிக்கும் வெவ்வேறு காலகட்டங்களில் மூன்று முறை மேற்கண்ட சாட்சிகளுக்கு முன்பு வைத்து நேரில் தலாக் செய்த விவரத்தை எழுத்துப்பூர்வமாக கடந்த 14.08.2023 அன்று பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் ஜாமாத் தலைவருக்கும் பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பியுள்ளேன் என்றும், அதனை 16.08.2023 அன்று பிரதிவாதியும், பிரதிவாதியின் ஜமாத் தலைவரும் பெற்றுக் கொண்டார்கள் என்றும் கூறியுள்ளார்.

16.வா.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில், 14.08.2023 அன்று வாதி தங்கள் ஜமாத் தலைவருக்கு பதிவு தபாலில் மேற்கண்ட சாட்சிகளின் முன்பு வைத்து பிரதிவாதியை மூன்று வெவ்வேறு காலகட்டங்களில் தலாக் செய்ததை

பதிவு செய்து பிரதிவாதிக்கும் தங்கள் ஜமாத்திற்கும் அனுப்பினார் என்றும் கூறியுள்ளார்.

17.மேற்படி வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வாதி, தலாக் செய்த விபரத்தை பதிவு தபால் மூலம் பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் ஜமாத் தலைவருக்கும் அனுப்பி அதனை பிரதிவாதியும், பிரதிவாதியின் ஜமாத் தலைவரும் பெற்றுக் கொண்டுள்ளதும் தெரியவருகிறது.

18.வாதியின் வழக்குரையில் பிரதிவாதி கடந்த 17.08.2023 அன்று வாதிக்கும், உடன்குடி நயினாபிள்ளைத்தெரு முகைதீன் ஆண்வர் ஜீம்மா பள்ளி ஜமாத் தலைவர் அவர்களுக்கும் பதில் கடிதம் அனுப்பியுள்ளார் என்றும், அதில் வாதி அனுப்பிய 14.08.2023 தேதியிட்ட கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை ஒப்புக்கொண்டுவாதியின் கோரிக்கையான மணமுறிவு (தலாக்) ஐ ஏற்றுக்கொண்டு பதில் அனுப்பியுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

19.வா.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில், பிரதிவாதியும் கடந்த 17.08.2023 அன்று வாதிக்கும், உடன்குடி நயினாபிள்ளைத்தெரு முகைதீன் ஆண்வர் ஜீம்மா பள்ளி ஜமாத் தலைவர் அவர்களுக்கும் பதில் கடிதம் அனுப்பியுள்ளார் என்றும், அதில் வாதி அனுப்பிய 14.08.2023 தேதியிட்ட கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை ஒப்புக்கொண்டுவாதியின் கோரிக்கையான மணமுறிவு (தலாக்) ஐ ஏற்றுக்கொண்டு பதில் அனுப்பியுள்ளார் என்றும் கூறியுள்ளார். வா.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில், 17.08.2023 அன்று பிரதிவாதி, வாதியின் தலாக் கடிதத்தை ஏற்றுக் கொண்டு தங்கள் ஜமாத்திற்கு பதிவு தபாலில் கடிதம் அனுப்பினார் என்றும் கூறியுள்ளார். வா.சா.ஆ.3 ல் தாங்கள் கடந்த 14.08.2023 தேதியிட்ட கடிதத்தை எனக்கும் எங்கள் ஜமாத்திற்கும் அனுப்பியிருந்தீர்கள் என்றும், தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டது போல கடந்த 26.04.2009 தேதியில் நம் இருவருக்கும் திருமணம்

நடைபெற்றது உண்மைதான் என்றும் மேலும் எனக்கும் தங்களுக்கும் மேற்கண்ட திருமணத்தின் பயனாக 30.07.2010 அன்று A.J.N. அபு முபிகா நபிசா என்ற பெண் குழந்தை பிறந்து 13 வயதாகிறது என்பதும் உண்மைதான் என்றும் நமக்குள் சில ஆண்டுகளாக கருத்துவேறுபாடு காரணமாக அடிக்கடி பிரச்சனைகள் ஏற்பட்டு கடந்த 1 வருடமாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்பதும் உண்மைதான் என்றும் நம் ஜமாத்தார்கள் குடும்ப பெரியோர்கள் நமக்கும் சமரசம் ஏற்படுத்தி நம்மை சேர்ந்து வாழ எடுத்த எந்த முயற்சியும் பலன் அளிக்கவில்லை என்பதும் உண்மைதான் என்றும் அதனால் கடந்த 2022 செப்டம்பர் முதல் நமக்கும் கணவன் மனைவி என்ற குடும்ப தாம்பத்ய உறவுமின்றி இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றோம் என்பதும் உண்மைதான் என்றும் தாங்கள் காஜாமைதீன் மகன் ஹஷன் சைபுதீன் மற்றும் உங்களது சகோதரரான அபுபக்கர் குமாரர் செய்யது ஷேக் மீரான் ஆகியோரின் முன்னிலையில் கடந்த 10.06.2023 அன்றும், 11.07.2023 அன்றும், 12.08.2023 அன்றும் வெவ்வேறு தேதிகளில் என்னை தலாக் செய்வதாக கூறினீர்கள் என்பதும் உண்மைதான் என்றும், தங்களுடைய 14.08.2023 தேதியிட்ட கடிதத்தின் அடிப்படையில் தாங்கள் என்னை தலாக் செய்ததை ஏற்றுக்கொண்டு இந்த பதில் கடிதத்தை எந்தவிதமான நிர்பந்தமும் இன்றி என்னுடைய சுயசிந்தனையுடன் தங்களுக்கும் எனது ஜமாத்துக்கும் இன்று அனுப்புகின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளதிலிருந்து வாதியின் வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளை பிரதிவாதி ஒத்துக்கொண்டுள்ளது தெரியவருகிறது மேலும் வாதி தரப்பு சாட்சியங்களிலிருந்தும் வா.சா.ஆ.3 லிருந்தும் பிரதிவாதியும், வாதி அனுப்பிய தலாக் கடிதத்தை ஏற்றுக் கொண்டு பதில் அனுப்பியுள்ளார் என்பதும் தெரியவருகிறது.

20.வாதியின் வழக்குரையில், வாதி 14.08.2023 அன்று பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் ஜமாத் தலைவருக்கும் பிரதிவாதி 17.08.2023 அன்று வாதிக்கும் ஜமாத் தலைவருக்கும் மணவிலக்கு (தலாக்) சம்பந்தமான கடிதங்களை ஜமாத்தார்கள் பரிசீலனை செய்து வாதியால் அனுப்பப்பட்ட மணமுறிவு (தலாக்) கடிதத்தை பிரதிவாதி ஏற்றுக்கொண்டதினால் மேற்கண்ட ஜமாத் சார்பாகா 20.08.2023 அன்று மேற்கண்ட ஜமாத்தார்கள் முன்னிலையில் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் ஏற்பட்ட 26.04.2009 தேதியில் நடைபெற்ற திருமண ஒப்பந்தம் மார்க்க அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதாக சான்று அளித்துள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஐ பார்வையிடும் போது உடன்குடி முஹிய்யத்தீன் பள்ளிவாசல் வழங்கிய வாதிக்கும், பிரதிவாதிக்கும் 26.04.2009 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்ததற்கான சான்றிதழ் என்பது தெரியவருகிறது.

21.வா.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில், தான் 14.08.2023 அன்று பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் ஜமாத் தலைவருக்கும் பிரதிவாதி 17.08.2023 அன்று தனக்கும் ஜமாத் தலைவருக்கும் மணவிலக்கு (தலாக்) சம்பந்தமான கடிதங்களை ஜமாத்தார்கள் பரிசீலனை செய்து தன்னால் அனுப்பப்பட்ட மணமுறிவு (தலாக்) கடிதத்தை பிரதிவாதி ஏற்றுக்கொண்டதினால் மேற்கண்ட ஜமாத் சார்பாகா 20.08.2023 அன்று மேற்கண்ட ஜமாத்தார்கள் முன்னிலையில் தனக்கும், பிரதிவாதிக்கும் இடையில் ஏற்பட்ட 26.04.2009 தேதியில் நடைபெற்ற திருமண ஒப்பந்தம் மார்க்க அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதாக சான்று அளித்துள்ளார்கள் என்றும் கூறியுள்ளார். வா.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில், வாதியும், பிரதிவாதியும் நேரில் கொடுத்த கடிதங்கள் வாதியும், பிரதிவாதியும் பதிவு தபாலில் விவாகரத்து தொடர்பாக கொடுத்த கடிதங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து 20.08.2023 அன்று வாதிக்கும்,

பிரதிவாதிக்கும் 26.04.2009 தேதியில் நடைபெற்ற திருமண ஒப்பந்தம் மார்க்க அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதாக ஜமாத்தார்கள் கூடி முடிவு செய்து ஜமாத்தின் செயலாளர் என்ற முறையில் தான் திருமண ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதற்கான சான்று அளித்துள்ளேன் என்றும் கூறியுள்ளார். மேற்படி வாதிகள் தரப்பு சாட்சியங்களிலிருந்தும், வா.சா.ஆ.4 லிருந்தும், வாதி மற்றும் பிரதிவாதி அளித்த கடிதங்களின் அடிப்படையில் 20.08.2023 அன்று வாதிக்கும், பிரதிவாதிக்கும் 26.04.2009 தேதியில் நடைபெற்ற திருமண ஒப்பந்தம் மார்க்க அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதாக ஜமாத்தார்கள் கூடி முடிவு செய்து திருமண ரத்து ஒப்பந்தம் வழங்கியுள்ளார்கள் என்பது தெரியவருகிறது.

22. மேற்படி வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளது தெரியவருகிறது. மேலும் இரு குடும்பத்தார்கள் ஜமாத்தார்களை வைத்து வாதி பிரதிவாதியை சமாதானம் ஏற்படுத்தி சேர்ந்து வாழ வைக்க முயற்சி செய்தும் சமாதானம் ஏற்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களிலிருந்து வாதியும் பிரதிவாதியும் இனிமேல் சேர்ந்து வாழ வழியில்லை என்பது தெரியவருகிறது. பிரதிவாதிக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றுக் கொண்ட பின்பும், பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வராததிலிருந்து வாதியின் வழக்கை எதிர்த்து பிரதிவாதிக்கு எதிர்வாதம் இல்லை என்பதானால் தான் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு ஆஜராகவில்லை என்று இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 101 ன்படி வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை நிரூபிக்கும் ஆரம்ப கட்ட மெய்பிக்கும் சுகை வாதியை சார்ந்தது. வாதியானவர் மேற்படி வழக்கில் தன் தரப்பு வழக்கை நிரூபித்துள்ள சூழ்நிலையில் அதனை மறுக்கும் பொறுப்பு பிரதிவாதிக்கு உள்ளது. ஆனால் பிரதிவாதி தரப்பில்

நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றுக் கொண்டு பிரதிவாதி தரப்பில் ஆஜராகவில்லை. இதிலிருந்து பிரதிவாதி வாதியின் வழக்கை ஒத்துக் கொண்டுள்ளார்கள் என்ற அனுமானமே தோன்றுகிறது. எனவே வாதி தரப்பு வழக்கை நிரூபித்த பின்னரும், பிரதிவாதி தரப்பில் அதனை மறுத்து எதிர்வாதம் செய்யாத சூழ்நிலையில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே பிரச்சனை எண். 1க்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>23. பிரச்சனை2 ற்கான தீர்வு:-</u>

**வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?**

இந்நீதிமன்றத்தில் பிரச்சனை 1 க்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ள நிலையில் வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் எதுவும் இல்லை என இந்த எழுவினாவிற்கு முடிவு செய்து இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவில்,**

**வாதியின் வழக்கை அனுமதித்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் 26.04.2009ம் தேதியில் நடைபெற்ற திருமணம் இரத்தாகிவிட்டது என விளம்புகை செய்து தீர்ப்புரைக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ஆண்டு மார்ச் மாதம் 28ம் நாள் வியாழக்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திருமதி.S. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு),
திருச்செந்தூர்.

<u>வாதிகள் தரப்பு சாட்சி:–</u>

1. வா.சா.1 – திரு. செய்யது ஜமால் அப்துல் நாசர்

2. வா.சா.2 – திரு.அப்துல் நசீர்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | 14.08.2023 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு, பிரதிவாதி ஜமாத்துக்கும் கொடுத்த மணமுறிவு கடிதம் |
| வா.சா.ஆ.2 | – | 18.08.2023 தேதியிட்ட பிரதிவாதியும், பிரதிவாதியின் ஜமாத்தாரும் வாதியின் மணமுறிவு கடிதத்தை பெற்றுக் கொண்டதற்கான பதிவு தபால் ஒப்புகை அட்டைகள் அசல் எண்ணம் 2 |
| வா.சா.ஆ.3 | – | 17.08.2023 தேதியிட்ட பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய கடிதம் அஞ்சல் உறையுடன் அசல் |
| வா.சா.ஆ.4 | – | 20.08.2023 தேதியிட்ட உடன்குடி நைனா பிள்ளை தெரு முகைதீன் ஆண்டவர் ஜீமா பள்ளி வழங்கிய திருமண ஒப்பந்த ரத்து சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.5 | – | 26.04.2009 தேதியிட்ட வழக்கின் வாதி, பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றதை முகைதீன் பள்ளிவாசல் நிக்கா பதிவேட்டில் பதிவு செய்ததன் ஒளிநகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–</u>

இல்லை

(ஒம்)திருமதி.S. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு),
திருச்செந்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
திருச்செந்தூர்.
அ.வ.எண். 123/2023
நேரிய / வரைவு தீர்ப்புரை
நாள் 28.03.2024